சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.105/2018

2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.P.பொன்னுத்தாய் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – சாமிநாதன் (Pw1) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு 28.07.2015 ம் தேதியிட்ட வாதிக்கு, 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தையுமான வேலு எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டு என்ற கடன் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.05.2018 ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ( அஞ்சல் ரசீதுடன் ) அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.05.2018 ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வந்த கவர்கள் (எண்ணம் 6 ) அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2018 ம் தேதியிட்ட நத்தம் நிலவரி திட்ட தூய சிட்ட உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.03.2022 ம் தேதியிட்ட B.வேலு பெயரில் உள்ள 2 வீட்டு மனைகளின் சிட்ட அசல்

**வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2018 ம் தேதியிட்ட B.வேலு பெயரில் உள்ள காரை வீட்டிற்கான மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.05.2018 ம் தேதியிட்ட B.வேலு பெயரில் உள்ள ஓட்டு வீட்டிற்கான மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.03.2022 ம் தேதியிட்ட B.வேலு பெயரில் உள்ள காரை வீட்டிற்கான மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.03.2018 ம் தேதியிட்ட B.வேலு பெயரில் உள்ள ஓட்டு வீட்டிற்கான மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.03.2022 ம்தேதியிட்ட வில்லங்க சான்று இணைய தள பதிவிறக்க நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.